EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 4

## இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

*முனைவர் ப. கலைவாணி*
உதவிப்பேராசிரியர்& துறைத்தலைவர்
பார்வதீஸ் கலை அறிவியல் கல்லூரி,
திண்டுக்கல்
மின்னஞ்சல்: pjkalaivani86@gmail.com

## *முன்னுரை*

பல நூற்றாண்டுக்களுக்கு முன்னரும், பின்னரும் வாழ்;ந்த மக்களின் வாழ்வியல் முறைகளை இன்றும் நாம் அறிந்துக்கொள்வதற்கு தமிழ் இலக்கிய நூல்கள் உதவுகின்றன. ஒரு படைப்பாளன் தான் வாழ்ந்த காலத்தில் மக்களிடம் கண்ட பழக்கவழக்கங்கள், பண்பாடு கலாச்சாரங்கள் இவற்றை தன் படைப்புகளின் வழியாக யாவரும் அறியும் வண்ணம் வெளிப்படுகிறான். படைப்பாளிகளின் சிந்தனையும் உலக இலக்கியப் படைப்பாளிகளின் சிந்தனையும் வேறுபாடும் மாறுபாடும் கொண்டவைகளாகவும் இருக்கும். இலக்கிய வானம் ஒன்றாயினும் திசைகள் வேறுவேறாகவே உள்ளன. இதன் மூலம் படைப்பாளிகள் தன் படைப்புகளின் வாயிலாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதுண்டு. சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் தொட்டு இவ்விலக்கிய வகையிலும் அதன் அடிக்கருத்தும் பாடுபொருளும் தனிமனிதனைச் சார்ந்ததாகவோ அல்லது குடும்பம், நாடு என வாழ்வியல் கூறுகளையும், சிந்தனைகளையும் கொண்டதாகவோ இருக்கின்றன. இதையே தன் படைப்புகளில் பதிவு

செய்கிறார்கள். அவ்வகையில் இலக்கியங்களின் வாயிலாக மக்களின் வாழ்வியல் நெறிகளை காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வாழ்வியல்-பொருள்

வரையறையின்றி வாழ்வதல்ல வாழ்க்கை. வாழ்வாங்கு வாழ்வதே வாழ்க்கை. உலகில் இப்படித்தான் வாழவேண்டும் என்ற நியதி ஒன்றுண்டு. எனவேதான் வாழ்வு எனும் சொல்லிற்கு "நல்வாழ்க்கை" என்றும் இயல் என்பதற்கு "இலக்கணம்" என்றும் கௌரா தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. ஆகவே, வாழ்வியல் என்பதற்கு நல்வாழ்க்கைக்கான இலக்கணம் என்று பொருளாகிறது.

## வாழ்வியல் கூற்றுக்கள்

மக்களுக்கு வாழ்வியலை உணர்த்தும் பணி சங்க காலத்தில் இருந்து நடைபெற்று வருகிறது என்பதற்கு,

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்"

என்று நரிவெரூஉத்தலையாரின் பாடலும்,

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்ற கணியன் பூங்குன்றனார் பாடலும் இதற்கு சான்றாக இருப்பதைக் காணலாம்.

ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்துடன் பல்வேறு இழைகளால் இணைக்கப்பட்டுள்ளான். இவனது சிந்தனைமுறை, ஒழுக்கக் கோட்பாடுகள் அனைத்தும் சமுதாய செல்வாக்கின் விளைவுகளாகும். இதனை உணர்ந்த வள்ளுவரும்

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது

துள்ளினுந் தள்ளாமை நீர்த்து" (குறள் - 596) என்றும்,

"இன்னா செய்தார்க்கு "இனியவே செய்யாக்கால்"என்றும் கூறுகிறார்.

## தனிமனித ஒழுக்கம்

சமுதயாயம் என்பது மனிதர்கள் கூடி வாழும் வாழ்வேயாகும். இதனால் தனிமனிதனுக்கும், சமுதாயத்திற்கும் நெருங்கிய உறவு இருப்பதால் தனி மனிதனின் ஒழுக்கம் சமுதாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். தனிமனிதன்

நல்லவனாக வாழ்கின்ற போது சமுதாயம் பண்பட்டதாக சிறந்து விளங்கும். உயரிய சமுதாயமாக அமைய தனிமனித ஒழுக்கம் அடிப்படையாகும். இதனை திருக்குறள்,

" அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்ற தறம்"4 (குறள் - 35)என்று கூறுகிறது.

ஒருவனுடைய வாழ்வு சிறப்பாக இருக்க வேண்டுமெனில் அவன் பிறர்மேல் பொறாமைக் கொள்ளுதலை விட வேண்டும். தேவையற்ற ஆசை, அதற்கு காரணமாக எழுகின்ற கோபம், இந்த கோபத்தின் காரணமாக வாயிலிருந்து வருகின்ற கடுஞ்சொல் ஆகிய தீய பண்புகளை அறவே களைய வேண்டும் என்கிறார் வள்ளுவர். மேலும்,பிறருடைய இல்லாளை காம எண்ணம் கொண்டு பார்க்காதவன் சிறந்த சான்றோன் எனப்படுவான். இதுவே தனிமனித ஒழுக்கத்தில் சிறந்த பண்பாகும். இதை,

" பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்

கறனென்றோ ஆன்ற வொழுக்கு" (குறள் - 148) என்று தனிமனிதனின் ஒழுக்கப்பண்பினை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

## அன்பு வாழ்க்கை

இல்லற வாழ்வு சிறப்புற அமைவதற்கு அடிப்படையாக இருப்பது அன்பு. அவ்வன்பே இருமனங்களையும் ஒன்றினைக்கும் உன்னதமான பாலம். கணவன் மனைவியின் ஊடலில் யாரேனும் ஒருவர் விட்டுக்கொடுத்து செல்வதற்கும், புரிதலுக்கும் அன்பே முதன்மையாக சிறந்து விளங்குகிறது.

தலைவர் சொன்னபடி நடப்பவர். சொன்னதை செய்பவர். நினைக்க நினைக்க இனியவர். எக்காலத்தும் என் தோள்களைப் பிரியாதவர். தாமரையில் உள்ள தாதுவினை ஊதித் தேனை எடுத்து உயர்ந்த சந்தனமரத்தில் தொடுக்கின்றது வண்டு.அத்தேனைப் போன்று மிக இனியவர். உயர்ந்த பண்புடையவர் என்று தலைவி கூறுகிறாள். தலைவன் மீது தலைவி கொண்ட அன்பு, நம்பிக்கை, தலைவனின் உயர்ந்த அன்பு, பண்பு ஆகியவை நற்றிணைப் பாடலின் வழி அன்பு வெளிப்படுவதைக் காணலாம்.

" நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்

என்றும் என்தோள் பிரிபுஅறி யலரே

தாமரைத் தன்தாது ஊதி மீமிசைச்

முனைவர் ப. கலைவாணி

சாந்தில் தொடுத்த தீம்தேன் போலப்

புரைய மன்ற, புரையோர் கேண்மை" (நற்றிணை - பா.வரிகள் 1-5)

## அன்றாட பழக்கவழக்கம்

நம்முடைய அன்றாட வாழ்வில் தினசரி நாம் செய்ய வேண்டிய செயல்களை பழக்கத்தில் கொண்டு அதனை வழக்கப்படுத்திக் கொண்டால் அதுவே அறத்தில் சிறந்தவர்களுக்கான எடுத்துக்காட்டாக நமது சான்றோர்கள் எடுத்துரைத்துள்ளனர். அதனை ஆசாரக்கோவை பாடல் வழி அறியலாம்.

" நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலஞ்செய்

துண்டாரே யுண்டா ரெனப்படுவா ரல்லாதார்

உண்டார்போல் வாய்பூசிச் செல்வ ரதுவெடுத்துக்

கொண்டா ரரக்கர் குறித்து" ( ஆ.கோ. பா - 18)

நம் உணவுமுறை அன்றைய காலத்தில் இருந்த உணவுமுறையிலிருந்து முற்றிலும் சற்று மாறியே வந்துள்ளன. நம் உடலானது ஆரோக்கியமான உணவால் வளர்ந்தது. உணவினை சரியான விகத்தில் எடுத்துக்கொண்டால் உறுப்புகள் அனைத்தும் சரிவர இயங்கி நீண்ட காலம் ஆரோக்கியமான வாழ்வினை வாழலாம். அத்தகைய உணவுமுறையை நாம் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை மேற்கண்ட பாடல் நமக்கு உணர்த்துகிறது. உணவு உண்பதற்கு முன்பு குளித்து, காலைக்கழுவி, வாயைத் துடைத்து, உண்கலத்தை உண்ணும் முன் நீரால் கழுவுதல், உண்ணுவதற்கு முன் பிடித்த தெய்வத்தை வணங்குதல், குளித்த பிறகு தூய ஆடைகளை உடுத்தல், தூங்கும் முறைகள், நல்ல மாணவர்கள் செயல் எவ்வாறு இருத்தல் வேண்டும் போன்றவைகள் நமது அன்றாட பழக்கவழக்கமுறைகளை இலக்கியங்கள் எடுத்துரைக்குகின்றன.

"கடமையைச் செய்ய வேண்டும். சோம்பல் அல்லாமல் தன் கடமையைச் செய்கிறவனே சிறந்த மனிதன். தன் நலம் கருதாமல் உழைக்கின்ற மக்கள் வாழும் சமுதாயம் தான் உயர்ந்த சமுதாயமாக வாழும்" (சாமி சிதம்பரனார்,பழந்தமிழர் வாழ்வும், வளர்ச்சியும் பக்-210) என்ற நல்ல சமுதாய வாழ்வியல் நெறிகளுக்கு உரியவற்றைச் சாமி சிதம்பரனார் கூறியுள்ளார். இதுமட்டுமின்றி ஒரு மனிதன் தான் வாழ்கின்ற காலத்தைத் தனக்காக மட்டும் வாழாமல் பிறருக்காகவும் வாழ்தல் வேண்டும். அவ்வாறு வாழ்கின்ற வாழ்க்கையே மகிழ்வையும் நிம்மதியையும் தரக் கூடியதாகும். "ஒருவன்

எல்லோருக்குமாக வாழ்வதே வாழ்வு மற்றது வீழ்வு" (ம.து.ச.தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் பக்-1237) என மது.ச.விமலானந்தம் குறிப்பிடுகின்றார்.

தமிழ்க் கவிஞன் பாரதியின் கூற்றும் இந்நேரத்தில் சிந்தனைக்குரியதாக விளங்குகிறது. "மனதில் உறுதி வேண்டும், வாக்கினில் இனிமை வேண்டும்" (பாரதியார் கவிதைகள் பக்-188) வரிகள் ஒரு மனிதன் தன் வாழ்வின் இலக்கையும் கடமையும் நோக்கி பயணிக்கும் போது உறுதி கொண்டு செல்லல் வேண்டும் அவ்வாறு சரிவர செல்வதினாலேயே வெற்றி அடைய முடியும்.

இவ்வாறு ஒருமனிதன் தன் வாழ்வில் எவ்வாறு ஒழுக்கநெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்ற வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்துரைக்கும் இலக்கியமாக நம் தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன..